பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## "கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு".

எபேசியர் 2:8

செய்தி மலர்
2022
செப்டம்பர்

இதழ் : 05
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



## தேவ நாம மகிமைக்காக . . .

இரக்கத்தில் ஐசுவரியம்முள்ள இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையின் குடும்பங்கள், சகோதர, சகோதரிகள், வாலிபர், சிறுபிள்ளைகள் அனைவரையும் வாழ்த்துவதில் சபையின் செயற்குழு மூலமாக கர்த்தருக்குள் மிகவும் களிகூறுகிறோம். தேவன் தாமே தமது இரக்கத்தினாலே கடந்த எட்டு மாதங்கள் சுகத்தோடும், சகல ஆசிகளோடும் நடத்தி தந்தார். புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கின்ற கிருபையையும் அளித்துள்ளார்.

கடந்த மாதம் முழுவதும் நடந்த ஒவ்வொரு ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், கேம்ப் ஊழியம் எல்லாவற்றிலும் அநேகரை கூட்டிசேர்த்தார். ஆசிகளை அளித்து ஆத்துமாக்களை அன்போடு நடத்தினார். நமது சபையின் குடும்பங்கள் அநேகர் தாய் தேசம் சென்று, வாஞ்சித்த அநேக காரியங்களை முடித்து, மீண்டுமாக இங்கு வந்து, வேலையில் பிரவேசிக்கவும், ஊழியத்தில் ஈடுபடவும் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக ஊழியங்களை செய்யவும் செய்த கர்த்தாதி கர்த்தருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லி துதிக்கலாம்.

நமது பிள்ளைகள் புதிய கல்வி ஆண்டுக்குள்ளாய் பிரவேசித்திருக்கிறார்கள். அநேக நாட்கள் Online வகுப்புகள் போன்றவற்றிலிருந்த அன்பு செல்வங்கள் மீண்டுமாய் நேரடி வகுப்புகள் செல்கின்றார்கள், தூயாதி, தூயவர் தாமே, சிறு பிள்ளைகளை நேசிக்கிற தேவன், தமது தூதர்களை கொண்டு நமது பிள்ளைகளை பாதுகாக்க, போகிற கிருபைக்காக, கர்த்தருக்கு நன்றி சொல்லுவோம். மேலே குறிப்பிட்ட அநேக நன்மைகள் ஆசீர்வாதங்களை நாம் கர்த்தரிடத்திலிருந்து பலவிதங்களில் பெற்றிருக்கிறோம். இவையாவும் அவருடைய நாமத்தினாலே, இரட்சிப்பினாலே, ஆவியின் அபிஷேகத்தினாலே மட்டு மல்லாது, அவர் மேல் நாம் வைத்திருக்கிற விசுவாசத்தினால் என்பதை நாம் ஒரு நொடியும் மறந்து விடக்கூடாது.

உறுதியான கட்டிடங்களுக்கு எப்படி அஸ்திபாரம் முக்கியமோ, அது போல உறுதியான, உண்மையான, கிறிஸ்துவ வாழ்க்கைக்கு விசுவாசம் நிச்சயம் தேவை, அது கர்த்தர் மேல் வைக்கும் விசுவாசமாக இருக்கட்டும். இது உறுதியாய் இல்லாமல் போகும் நேரத்தில்தானே, நம் படகு அலைகளில் நடுவே ஆடியும் அசைந்தும் நகரும் மணல் மேல் கட்டப்பட்ட வீடுபோலாகி, மனம் நொந்து காணப்படுவோம்.

பரிசுத்தர் பவுல் குறிப்பிட்டது போல கர்த்தரின் பேரில் உன் விசுவாசத்தை அஸ்திபாரமாக வைத்து, அவரையே நம்பி, அவரிலே சார்ந்து கொள்வோம், விசுவாசத்தில் உறுதியாய் இருப்போம். விசுவாசத்தினாலே நாம் இரட்சிக்கப்பட்டோம்,

**"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு". (எபேசியர் 2:8)**

இரட்சிக்கப்பட விசுவாசம் நம்மிடத்தில் உண்டாக்கின்ற விசுவாசமும் தான் இரட்சிப்பாய் மாறுகின்றது.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும், உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

நம்முடைய சுத்திகரிக்கப்பட்ட இருதயமும், நம்முடைய விசுவாசமும் நமக்கு பரிசுத்த ஆவியை பெற்றுதரும்."தாகமுள்ளவர் மேல் தண்ணீரையும், வரண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆவீயையும் ஊற்றுவேன், என்று வாக்குரைத்தவர் வாக்கு மாறாதவராய் ஜீவிக்கிறார்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்வது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கிம்படி வேண்டுகிறேன் என்று கர்த்தர் வெளிபடுத்துகிறார். நம்முடைய எல்லா வியாதி, சாபங்களையும் விசுவாசமுள்ள ஜெபம் (பிணியாளியை) இரட்சிக்கும். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்று கூறுகிறார். அவருடைய

வார்த்தைகள் ஒன்றும் தவறிப் போவதில்லை, விசுவாசத்தோடு , நல் ஆசிகளையும், பூரண சுகத்தையும், தெய்வீக சமாதானத்தையும் பெற்று வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

வருகின்ற மாதத்தில் நடைப் பெறப்போகும். ஒவ்வொரு, ஆராதனைகள், ஜெபகூடுகைகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து கொடுக்கும் படியாகவும், சபையோர் யாவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளவும், நாம் அனைவரும் விசுவாசத்தோடு ஜெபிப்போம். பிரிந்து இருக்கின்ற பிள்ளைகள், உறவுகள், பெற்றோர்கள் அனைவருக்காகவும் ஜெபித்துக் கொள்ளலாம். தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

சபை ஊழியர்,
சகோதரர். ஜெயசேகர்

## தேவ செய்தி

### கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக

யோவா-8:36 "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்"

தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மை பாவங்களிலிருந்தும், சாபங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும் விடுதலையாக்குகிறார்.

எல்லாம் கர்த்தருடைய கிருபை, சித்தம். கர்த்தர் மூன்று விதங்களில் நமக்கு விடுதலை தருகிறார். கர்த்தர் நமக்கு குமாரன் மூலமாயும், அவருடைய வார்த்தைகளின் மூலமாயும் மற்றும் அவருடைய ஆவியினாலும் விடுதலை தருகிறார். ஆமென்

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா,சமாதானப்பிரபு என்னப்படும். ஏசா-9:6

**1.குமாரன் இயேசு கொடுக்கும் விடுதலை...**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அநேக வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார், பிசாசுகளை துரத்தினார் அவர் மூலமாய்

அதியசங்களும் அற்புதங்களும் நடந்தது. 38 வருடம் வியாதியாயிருந்தவனை குணப்படுத்தினார். யோவா–5:14–ல் இயேசு பின்பு தேவாலாயத்தில் அவனை கண்டு இதோ நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே என்றார். எல்லோரும் பாவி என்று விபசார பெண்ணை பார்த்து சொல்லும்போது ஆண்டவர் நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை என்று சொல்லி ஜனங்களிலிருந்து விடுதலை கொடுப்பதை வேதத்தில் பார்க்கிறோம்.

பிறவிக்குருடன் இயேசுவை நோக்கி தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று சத்தமாய் கூப்பிடும்போது இயேசு அவன் அருகில் வந்து அவனுக்கு பார்வை கொடுப்பதை பார்க்கிறோம்.

18 வருடமாய் நிமிரக்கூட முடியாத கூனி என்ற ஆபிரகாமின் குமாரத்திக்கு பிசாசின் கட்டுகளை அவிழ்த்து விடுதலை தருவதைப் பார்க்கலாம்.

யோவா–3:17–ல் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைண குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

வசனம் 18–ல் அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் என்று வேதம் சொல்கிறது.

சங்கீ–32:1,2–ல் வாசிக்கிறோம், எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான் எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் என்னாதிருக்கிறாரோ எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான். அதுமட்டுமல்ல தாவீது தன்னுடைய சங்கீ–119:154 எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொண்டீர் என்று சொல்வதைப்பார்க்கலாம். ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திறகுள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் என்று எபி–2:15–ல் வாசிக்கிறோம்.

உலகத்தில் மனுஷ குமாரனாக வந்து நம்முடைய எல்லாருடைய பாவங்களையும் சாபங்களையும் சுமந்து தீர்த்த ஒரே தேவ ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்து.

## 2.வார்த்தையினால் கொடுக்கும் விடுதலை

யோவா–8:32 "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"

இயேசு கிறிஸ்து தம் வார்த்தையினால் பிசாசை ஜெயித்தார். அது மட்டுமல்ல தம்முடைய வார்த்தையினால் சுகப்படுத்தினார். காற்றையும்

கடலையும் அதட்டினார். சகல அதிகாரமும் பிதாவினால் இயேசு கிறிஸ்துவிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும் என்று சங்கீ–33:9 –சொல்கிறபடியே இயேசு கிறிஸ்துவினால் நடந்தேறியது.

நூற்றுக்கு அதிபதி தம் வேலைக்காரனை சொஸ்தமாக்கும்படி இயேசு கிறிஸ்துவினிடம் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்படி வேண்டிக்கொண்டான் என்று வாசிக்கிறோம். இயேசுவின் வார்த்தையில் குணமாக்கும் வல்லமை இருந்தது. மரியாளோ இயேசுவின் பாதத்தில் அமர்ந்து என்ன சொல்லப் போகிறார் என்று காத்திருந்தாள். அதுபோல நாமும் காத்திருக்கும் போது நமக்கு வேதத்தின் மூலம் வார்த்தையை வெளிப்படுத்துவார். ஆமென்.

பிதாவின் சித்தத்தின்படி தனக்கு பிதா என்ன சொன்னாரோ அதன்படி இயேசு செய்தார். பிதாவின் கட்டளைக்கு கீழ்படிந்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு
சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் என்று (பிலி–2:6,7)பார்க்கிறோம்.
ஆகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கு கீழ்படியும் போது நம்மை விடுதலையாக்குவார் என்பதில் சந்தேகமில்லை.

## 3.ஆவியினால் விடுதலை

2–கொரி–3:17 "கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு"
இயேசு தம்முடைய சீஷர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்வதை யோவா–20:22,23 வாசிக்கிறோம். மேலும் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சீஷர்களுக்கு கொடுத்தார்.

பெந்தகொஸ்தே நாளில் வந்திருந்த எல்லார் மேலும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷையிலே பேசினார்கள் என்றும் பார்க்கிறோம். பேதுரு தைரியமாக இயேசுகிறிஸ்துவை அறிக்கையிட்டு அநேகரை மனந்திரும்ப செய்து பரிசுத்த ஆவியின் வரத்தை பற்றி சொல்வதை பார்க்கலாம்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் என்று இயேசு சொன்னதை விசுவாசிப்போம். கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும். (சகரி–4:6) கர்த்தருடைய ஆவியினாலே எல்லாம் ஆகும்.

**கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பான சகோதர, சகோதரிகளே, இயேசுவினால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் மூலமாய் அநேக காரியங்களை வேதத்தில் பிதாவின் சித்தத்தின்படி நடப்பித்தார். அதனால் அவருடைய சித்தத்திற்கு நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை ஒப்புக்கொடுக்கும்போது எந்தவொரு காரியத்தைக்குறித்தும் கவலைப்படதேவையில்லை. ஆமென்**

**அன்பு சகோதரர்,**
**S.சுகுமார்**

# Kids Corner

Ask and it will be given to you seek and you will find knock and the door will be opened to you. For everyone who asks receiver the one who seeks finds and to the one who seeks finds and to the one who knocks, the door will be opened. Matthew 7:7-8

## 10 Commandments

1.You shall have no other gods before me.
2.You Shall not make idols.
3.You shall not take the name of the Lord your God in vain.
4.Remember the Sabbath day to keep it holy.
5.Honor your father and your mother.
6.You shall not murder.
7.You shall not commit adultery.
8.You shall not steal.
9.You shall not bear false witness against your neighbor.
10.You shall not covet.
Amen.

By Amesh.

Jesus said to him, "I am the way, and the truth, and the life. No one comes to the Father except through me. – John 14: 6

## Powerful words of Jesus

"He that is without sin among you, let him first cast a stone at her."

"Come, follow me," Jesus said, "and I will send you out to fish for people."
"For my yoke is easy and my burden is light."

## About my Jesus

Jesus was called Messiah
Jesus said, "I and the Father are one"
People considered Him as Son of God
He gave the message to the world about Humanity
Jesus is also called as Yeshu Masih
He was born in a Jewish family
Jesus Christ was a Shepherd
He died on cross to remove sins from people
Jesus forgives those who sinned
Jesus said if anyone slaped on the face we have to show them the other side
"Be kind and compassionate to one another, forgiving each other, just as in Christ God forgave you." – Ephesians 4:32

By
D. Vincy Rani

## கர்த்ரைப் பின்பற்றுகிறவன்

லூக்கா 9:23 பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

முதலாவது கர்த்தரைப் பின்பற்றுகிறவன் செய்ய வேண்டியது தன்னைத் தான் வெறுக்க வேண்டும் பொதுவாக யாரும் அவர்களை அவர்களே வெறுப்பது இல்லை, மாறாக அவர்கள் அவர்களே புகழ்ந்து கொண்டு, அவர்களையே பெருமையாக பேசிக்கொண்டு, தனக்குதான் எல்லாம் தெரியும் தான் சொன்னது தான் நடக்க வேண்டும் என்று நினைப்பார்கள், ஆனால் கர்த்தரை பின்பற்ற மனதாயிருந்தால் தன்னை தான் வெறுக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் சொல்கிறார்.

பிலிப்பியர் 3:8 என் கர்த்தராகிய கிறிஸ்மு இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும், நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். எவைகள் என்றால்,

பிலி 3:7,11 எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் . குப்பையாக என்னுகிறேன் பிற்பாடு தான் சொல்லுகிறார்.

பிலி 3:12 நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறியவையானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதர்க்காக பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆடையாய்த் தொடருகிறோன்.
நாம் கர்த்தரை பின்பற்ற மனதாயிருந்தால், நாம் பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர விரும்பினால் முதலில் நாம் செய்ய வேண்டியது தன்னைத் தான் வெறுக்கின்ற அனுபவம் வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலிருந்து அவர் எப்படி கர்த்தரைத் தொடர்ந்து எதை நஷ்டமென்று விட்டார் வேதத்தின் அடிப்படையில் நாம் அறிந்து கொள்ளலாம்.

(தொடர்ச்சி 14–ஆம் பக்கத்தில்) . . .

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்(ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஆன்டனி கமலதாசன்
செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வி. மோனிகா ஷெர்லின்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
சகோதரி. ஜெபா ராஜேந்திரன்
சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
செல்வன். அமீஸ் டேவிட்
செல்வி. எஸ்தர் லிடியா
செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
சகோ. ஷர்மன்ராஜ்
செல்வி. டெலிஷா காட்லின்
சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
செல்வன். சந்தோஷ் ஜெயகுமார்
செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
சகோதரி. சுபா ஸ்டீபன்

சகோதரி. அமுதா சுகுமாரன்
செல்வி. அறிவழகி கலிய மூர்த்தி
செல்வி.ஜெனேலின் ஜெரின்
சகோ. மணிராஜ்
செல்வி. பெர்டினா சுனில்
செல்வன். பிரயான் சதீஷ்குமார்
செல்வி. தீபா ராஜன்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்
செல்வன். டோவின் தாமஸ் திவ்யராஜ்
சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
செல்வி. ரீனா வேளாங்கன்னி
செல்வன். ஆரோன் டேனியல்
சகோதரி. அனிதா ஜஸ்டஸ் விஜயகுமார்
சகோ. தினேஷ் குமார்
சகோதரி. ஜாரல் ஜெனிக்கா
செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. அருள்மணி

திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்

திருமதி & திரு. பாலகிருஷ்ணன்

திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்

திருமதி & திரு. மார்க் ஆன்டனி

திருமதி & திரு. ஃபிராங்கிளின்

*நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;*

*ஏசாயா 54:3*

# 2022 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/09/2022 | சகோ.காட்டீஸ் | சகோ.தாமஸ் |
| 11/09/2022 | சகோ.வேலு ராமர் | சகோ.கிறிஸ்டோபர் .M |
| 18/09/2022 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ஆன்டனி |
| 25/09/2022 | சகோ.ஆரோக்கிய தாஸ் | சகோ.கிறிஸ்டோபர் .J |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/09/2022 | சகோ.பிரசாத் | சகோ.ஸ்டீபன் |
| 09/09/2022 | சகோ.வில்சன் | சகோ.சுகுமார் |
| 16/09/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை (Blessing Ministry Singapore ) | |
| 23/09/2022 | வாலிபர் ஆராதனை | |
| 30/09/2022 | சகோ.ஸ்டாலின் | சகோ.ஏசுரெத்தினம் |

24/09/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
(வேத வினா பகுதி –நாகூம், ஆபகூக் & செப்பனியா)

30/09/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் 8:00 மணி வரை
(வேத வினா பகுதி –அப்போஸ்தலர்)

# 2022 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.நீதிமான்களின் கூடாரங்களில் என்ன உண்டு?

2.இரும்பில் அடைக்கபட்டிருந்த பிராணன் யாருடையது?

3.எது உண்மையானது?

4.அவருடைய கிருபை எவ்வளவு பெரியது?

5.யாருடைய ஜெபம் பாவம் ஆகட்டும் என்று தாவீது சொல்கிறார்?

6.எதற்காக குறித்த காலம் வந்தது?

7.அந்நிய ஜனங்களின் பலத்தை கர்த்தர் யாருக்கு கொடுத்தார்?

8.யாருடைய சந்ததி ஆசீர்வதிக்கப்படும்?

9.காற்று வீசினவுடன் இல்லாமல் போனது எது?

10.வானமும் பூமியும் யாருடையது?

11.இஸ்ரவேல் ஜனங்களுக்கு கண்ணியாய் அமைந்தது எது?

12.குருவிகள் எங்கே கூடு கட்டும்?

13.துர் செய்தியை கேட்டும் பயப்படாதவன் யார்?

14.சங்கீதகாரனுடைய வாழ்நாள் எதை போல ஒழிந்துபோயிற்று?

15.பொருத்தனைகளை எங்கே நிறைவேற்றுகிறார்?

விடைகளை வருகின்ற 20-09-2022க்குள்
(WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
சங்கீதம் 102–118 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு விடை

1.மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது (சங் 65:13)
2.மதிகேடன் (சங் 53:1 )
3.தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவது (சங் 59:30)
4.யூதா (சங் 78:68)
5.துன்மார்க்கர் (சங் 73:20)
6.கர்த்தருடைய கிருபை (சங் 63:3)
7.பயப்படுகிற, நம்புவேன் (சங் 56:3)
8.பாசான் பர்வதம் (சங் 68:15 )
9.சீயோனில் (சங் 76:2)
10. மன்னா (சங் 78:25)
11.கபடுசெய்யும் நாவு (சங் 52:2)
12.பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார் (சங் 72:13)
13.அக்கிரமம் (சங் 69:28)
14.சங்கீதம் 72
15.நம்பாதிருங்கள், பெருமை பாராட்டாதிருங்கள் (சங் 62:10)

## 2022– ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.பியூலா ஜெகன்நாதன்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.செலின் டேவிட்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.வனித்தா
Sis.ஜெஸ்லெட்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Bro.எபிநேசர்
Bro.பால்ராஜ்

பிலி 3:5-6 நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.
7 காரியங்களை பவுல் நஷ்டமென்று விட்டதாக நாம் காண்கிறோம் அந்த 7 காரியங்களில் 4 காரியங்கள் பவுல் பிறக்கும் போது அவருக்கு கிடைத்தவைகள். 3 காரியங்கள் அவர் கற்றுக் கொண்டதன் விளைவாக கிடைத்தவைகள்.

## பிறப்பினால் கிடைத்தவைகள்:

## 1.விருத்தசேதனம் :

விருத்த சேதனம் என்பது அது தேவனோடு, அல்லது தேவனின் உடன்படிக்கையில் அடையாளம்.
ஆதி 17:12 மற்றும் 14 வசனங்களை நாம் பார்த்தால் இஸ்ரவேல் ஜனங்கள் சாகதபடிக்கு ஜனத்தில் இருந்து அறுப்புண்டு போகதபடிக்கு இருக்க வேண்டும் என்று சொன்னால் ஒவ்வொரு ஆண் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும் என்று ஒரு உடன் படிக்கையை தேவன் கொடுத்தார். பவுல் இதே உடன்படிக்கையை அவன் பிறப்பினால் பெற்றிருந்தான்.

## 2.இஸ்ரவேல் இனத்தான் :

இஸ்ரவேல் என்ற பெயருக்கு அர்த்தம் போராடி மேற்கொண்டவன் என்று அர்த்தம்.
இஸ்ரவேல் -இஸ் என்றால் மனிதன், சுரா- என்றால் போராடுதல், ஏல்- என்றால் தேவன், இதனை நாம் ஆதி 32:28 வசனத்தில் வாசிக்கிறோம்.

## 3.பென்யமீன் கோத்திரம்:

பென்யமீன் என்றால் கர்த்தருக்குப் பியமானவன் என்று அர்த்தம். உபா 33:12.

## 4.எபிரேயன்:

எபிரேயன் என்றால் தடைகளை தாண்டி வந்தவன் ஆறுகளை கடக்க வந்தவன் என்று அர்த்தம். ஆதி 14:13-16

## 5.பரிசேயன்:

பரிசேயன் என்றால் தேவனுக்கென்று பிரித்தெடுக்கபட்டவன் என்று அர்த்தம், அவர்கள் தேவனையும், ஆவியையும் விசுவாசிப்பார்கள். அப் 23:8

## 6.சபையை துன்பப்படுதினவன்:

சபையை துன்பப்படுத்துவதற்க்கான அதிகாரத்தை பெற்றவன். அப் 9:1-2

## 7.நியாயப்பிரமானத்தின்படி குற்றஞ் சாட்டப்படாதவன்:

பவுல் நியாயப் பிரமாணத்தின்படி வாழ தன்னை அர்பணித்தவன். யாக் 4:12.

அப்போஸ்தலனாகிய பவுல் தான் பிறப்பினால் கிடைத்த 4 மேன்மையையும் , தான் கற்றுக் கொண்ட 3 காரியங்களையும் தேவனை அறிவதற்கு குப்பையாக எண்ணி விட்டார்.

நாம் இரட்சிக்கப்படும் போது நாம் கற்றுக் கொண்ட காரியங்களை ஒரு வேளை விடுகிறோம், புகைப்பிடிப்பது, தீய படங்களை பார்ப்பது, பிறருக்கு விரோதமான காரியங்கள், பேச்சுகள், மாம்ச இச்சையான காரியங்கள், கோபங்கள் எல்லாவற்றயும் விட அனுமதிக்கிறோம். ஆனால் பிறப்பிலே இருக்கின்ற காரியங்களை விட்டு இருக்கிறோமா? இன்றைக்கும் சாதிப் பெருமை பேசுகிற, உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன், பலமுல்லவன், பலவீனமானவன், இருக்கிறவன், இல்லாதவன் என்ற எண்ணங்கள் அநேகராய் விட முடியவில்லை.

ஒரு பழமொழி சொல்வார்கள், ஜென்ம சுபாவம் செத்தாலும் போகாது, ஆனால் அந்த ஜென்ம சுபாவத்தை இயேசுவிடம் கொடுத்தால் மட்டுமே போதும். நம்முடைய எல்லா பாவத்தையும் நீக்கி நம்மை பரிசுத்த படுத்த அவராலே மட்டும் முடியும்.

உண்மையாக நாம் தேவனைப் பின்பற்ற விரும்பினால் இந்த 7 காரியங்களை விட்டு குப்பையாக எண்ணி உதரி தள்ளினால் கர்த்தரை பின்பற்ற முடியும்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

வாலிபம் இயேசுவுக்கே

## கிரியைகளில் மகிழும் தேவன் (சங் 104:31)

பிரியமானவர்களே, நாம் எந்த ஒரு காரியத்திலேயும் விசுவாசம் வைத்துள்ளோமானால் அதை தம்முடைய கிரியைகளில்தான் வெளிப்படுத்த முடியும். சங் 92:45-ல் வாசிக்கிறோம் கர்த்தாவே உமது செய்கைகளினால் என்னை மகிழ்ச்சியாக்கினீர். உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன். கர்த்தருடைய கரத்தின் கிரியைகள் நம் சிந்தனைக்கு கூட எட்டாதது.

தாவீது கூறுகிறான், கர்த்தாவே உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானது. நீர் ஒருநாளும் சொல்லிவிட்டு அதை செய்யாமற் போகமாட்டீர் நீர் சொல்ல அது நடக்கும். வாக்குதத்தம் செய்த பின்பு அதை குறித்து யோசிக்க மாட்டீர்.

ஆனால் நாம் சில சிக்கலான சூழ்நிலைகள் தம்மை சூழும் போது நமது கிரியை எப்படி இருக்கிறது என்று சிந்தித்து பார்ப்போம். அந்த நெருக்கமான சூழ்நிலைகளிலும் நம்முடைய கிரியை அதாவது செயல்கள், நமது வாயின் வார்த்தைகள் தேவனை மகிமைபடுத்துகிறதா? அல்லது துக்கப்படுத்துகிறதா? மகிமைபடுத்தினால் "நமது கிரியைகளில் தேவன் மகிமைபடுவார்" என்று அறிவோம்.

எபி 6:10-ல் நமது கிரியைகளை மறந்து வருவதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. எனவே நாம் கிரியைகளில் தேவனை மகிமைபடுத்துவோம். அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவோம்.

வெளி 15:3 தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமானவைகள்.

## கிரியைகளினால் நீதிமானாவர்கள்:

யாக் 2:23,24-ல் வாசிக்கிறோம் "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது".
ஆபிரகாம் விசுவாசத்தினாலே மட்டும்மல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்பட்டான். நாமும் விசுவாசித்து அதை நம்முடைய கிரியைகளினால் வெளிப்படுத்தும் போது தேவன் நம்மில் மகிமைபடுவார்.

யாக் 2:25–ல் ராகாப் என்னும் வேசி தூதர்களை ஏற்றுக் கொண்டு, வேறு வழியாய் அனுப்பிவிட்ட போது கிரியைகளினாலேயே நீதிமானாக்கப்பட்டாள்.

நேகேமியா என்னும் தேவ மனிதன் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கியால் சுட்டெரிக்கப்பட்டதையும் கண்டு அனயதலாய் இருக்கவில்லை. அதை எழுந்து கட்டி கிரியைகளினால் வெளிப்படுத்துகிறான்.

1யோ 3:18–ல் வாசிக்கிறோம் " என் பிள்ளைகளே வசனத்தினாலும் அன்புகூரக் கடவோம்.

கிரியை வெளிப்பட யாக் 5:11–ல் பொறுமையாக இருங்கள் என்று வாசிக்கிறோம்.

சங் 111:17–ல் அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமாவைகள்.

சங் 103:7–ல் தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியப்பண்ணினார் என்று வாசிக்கிறோம் .

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைதனத்தில் இருந்த போது அவருடைய கரத்தின் கிரியைகளை கண்டார்கள்.

எகிப்து கனத்திற்கும், இஸ்ரவேல் ஜனத்திறக்கும் உள்ள வேறுபாட்டினை, தேவன் இஸ்ரவேல் ஜனத்தை எப்படி நேசித்தார் என்று 10 வாதைகளின் மூலம் தெரியபண்ணினார். ஒரு வாதையும் இஸ்ரவேல் ஜனத்தை தொட தேவன் அனுமதிக்கவில்லை. தேவனின் கிரியையை அதிகமாய் கண்டார்கள். ஆனால் சங் 106:13–ல் வாசிக்கிறோம் "இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய கிரியைகளை மறந்தார்கள்" சங் 107:28–ல் கிரியைகளினால் தேவனை கோபமூட்டினார்கள்.

தேவன் விரும்பாத காரியத்தில் தன்னை உடன் படுத்திக் கொண்டார்கள். தேவனை மறுதலித்தார்கள். பலிபீடங்களை ஏற்படுத்தி அந்நிய தேவர்களளை வணங்கினார்கள். இந்த இஸ்ரவேல் ஜனத்தின் கிரியைகளில் தேவன் மகிமைபட மாட்டார்.

நாம் நம்முடைய கரியைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நீதி 12:14–ல் அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத்தக்கதாக அவனவனுக்கு கிடைக்கும்.

வெளி 2:1 எபேசு சபையை பார்த்து உன் கிரியையும் என் பிரயாசத்தையும், உன் பொறுமையையும் கண்டேன் என்கிறார்.

வெளி 2:8 சிமிர்னா சபையை பார்த்து உன் கிரியையும், உன் உபத்திரவத்தையும் அறிந்திருக்கிறோன் என்கிறார்.

வெளி 2:12 பெர்கமு சபையை பார்த்து உன் கிரியையும், சாத்தானுடைய சிங்காசனமாகிய இடத்தில் நீ குடியிருக்கிறதையும் நீ என் நாமத்தை பற்றிக் கொண்டு மறுதலிக்காமல் இருக்கிறதையும் அறிவேன்.

வெளி 2:18 தியத்திரா சபையை பார்த்து உன் கிரியையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும் உன் பொறுமையையும் அறிந்து இருக்கிறேன் என்றார்.

வெளி 3:1 சர்தை சபையை பார்த்து உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்.

வெளி 3:7 பிலதெப்பியா சபையை பார்த்து உன் கிரியையும் அறிந்திருக்கிறேன் என்று கூறினார்.

வெளி 3:14 லவோதிக்கேயா சபையை பார்த்து உன் கிரியையும் அறிந்து இருக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இவ்வாறு ஏழு சபையின் கிரியைகளை குறித்து தேவன் கூறுகிறார். நம்மை குறித்தும் வெளி 22:12 அவனவனுடைய கிரியையின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோட கூட வருகிறது என்றார். எவனே நம்முடைய கரியைகளில் அவரை மகிமைபடுத்தி வருகையில் தேவன் நம்மை துக்கத்தோடு அல்ல, சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள நல்ல கிரியைகளை வெளிப்படுத்துவோம்.

கர்த்தரின் பணியில்,
சகோதரி.ஆஸ்லின் சுபின்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில










# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. பால் ஜெகந்நாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only